**அ.வ.எண். 118/2018**
**வா.சா.1 : செந்தில்நாதன்**
**தேதி : 02.03.2026**

**I.A.No.104/2026 என்ற மனுவில் 27.02.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 20 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் திருப்பூரில் 15 வேலம்பாளையத்தில், சிறுபூலுவப்பட்டியில் குடியிருக்கிறேன். எனக்கு 68 வயதாகிறது. இந்த வழக்கை ஆனூர் அம்மன் பைரகுல கல்வி சமய சமூக நல அறக்கட்டளை சார்பாக நீங்கள் வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆனூர் அம்மன் கோவில் அறங்காவலர் உறப்பினர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ளேன். அறங்காவலர் குழு தலைவர் என்ற முறையில் சி.தேவசேனாதிபதி என்பவர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 வாயிலாக ஆனூர் அம்மன் பைரகுல கல்வி சமய சமூக நல அறக்கட்டளை சார்பாக தேவசேனாதிபதி வழக்கு நடத்த அதிகாரம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஆனூர் அம்மன் சேங்கலாபுரம் தும்பிவாடி ஜெயங்கொண்டம்மன் என்று குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் (மேற்சொன்ன இருகோவில்களும் வாதி கோவில்களாகும்.) இரண்டு கோவில்களுக்கும் பாத்தியப்பட்ட சொத்தை யார் அனுபவித்து வந்தார்கள் என்றால் ஆனூர் அம்மன், ஜெயங்கொண்டம்மன் சாமிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பைரகுல மக்கள் மேற்பார்வையில் பூசாரிகள் பார்த்து கொண்டிருந்தார்கள் விவசாயம் பார்த்து அந்த வருமானத்தில் பூசாரிகளின் ஜீவனத்திற்கு எடுத்துக்கொண்டார்கள். தாவா சொத்துக்கள் கோவிலுக்கு சொந்தமான சொத்துக்கள் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பூசாரி பெரியாண்டி அனுபவித்து வந்தார் என்று கண்டுள்ளது என்று சொன்னால் அனுபவித்து

வந்தார் என்று சொல்வது தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் பயிரன் குலத்திற்கு சொந்தம் என்று ஒரு வார்த்தை கூட இல்லை என்று சொன்னால் சரிதான் சுவாமி ஆனூர் அம்மன் பயிரன் குலத்திற்கு குலதெய்வம். ஆனூர் அம்மனும், ஜெயங்கொண்டம்மனும் உள்ளூர் கிராம கோவில்கள் என்று சொன்னால் தவறு பயிரன் குலத்திற்கு சொந்தமான கோவில்கள். தும்பிவாடியில் உள்ள ஆனூர்அம்மனம் செங்கலாபுரத்தில் உள்ள ஜெயங்கொண்டம்மனும் உள்ளூர் வேட்டுவ கவுண்டர்களுக்கு சொந்தமான கோவில் என்று சொன்னால் தவறு. வேட்டுவ கவுண்டர்கள் பரம்பரையாக தர்மகர்த்தாக்களாக வாதி கோவில்களுக்கு இருந்து வந்துள்ளார்கள் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள பெரியாண்டியின் வாரிசுகள் இன்றும் பூஜை செய்து வருகிறார்கள் என்று சொன்னால் தவறு. செங்கலாபுரம் ஜெயங்கொண்டம்மன் கோவிலுக்கும் தும்பிவாடி ஆனூர்அம்மன் கோவிலுக்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் ஆனூர்அம்மன் துணை தெய்வமான ஜெயங்கொண்டம்மன் ஆகிய இரு கோவில்களும் ஒரே இடத்தில் உள்ளது. இனாம் பேர் ரிஜிஸ்டர் என்பது ஒரு வரலாற்று பதிவு என்று சொன்னால் அது ஒரு ஆவணம் ஆகும். இனாம் ஆவணம் நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தள்ளீர்களா என்றால் சரியாக ஞாபகமில்லை. இனாம் ஆவணத்தில் சில நிபந்தனைகள் உள்ளது என்று சொன்னால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் பதிவேட்டில் ஆனூர் அம்மன், ஜெயங்கொண்டம்மன் வாதி கோவில்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.2–ல் வாதி கோவில்களில் தற்காலிக பூசாரிகளாக மணிக்கட்டியாண்டி மற்றும் இரண்டு பெயர்கள் என்று குறிப்புள்ளது என்று சொன்னால் சரிதான். இந்து அறநிலையத்துறையில் Scheme நிறைவேற்ற வேண்டி 10/2013 என்ற மனு தாக்கல் செய்துள்ளீர்கள்

என்று சொன்னால் சரிதான். இது குறித்து 2018 வரை ஏதாவது உத்தரவு உள்ளதா என்றால் சரியாக ஞாபகமில்லை. அறநிலையத்துறை சார்பாக வழக்குச்சொத்தை Recover செய்ய சொல்லி கடிதம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கடிதம் தேதி 28.07.2018, ந.க.எண்.40537/2018 –னை செல்லாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியாக ஞாபகமில்லை. அதேபோல் இந்து அறநிலையத்துறை உதவி ஆணையர் கடிதம் ந.க.எண்.97/2018, நாள் 23.08.2018 கடிதத்தில் நிலங்களை மீட்க சொல்லி கொடுத்த கடிதமும் உயர்நீதிமன்றத்தால் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறு வழக்காட எங்களுக்கு உரிமை உள்ளது. தும்பிவாடி ஆனூர் அம்மன் கோவிலை எப்போது புணரமைத்தீர்கள் என்றால் 2014 – 2015 ஆண்டில் புணரமைக்கப்பட்டது. தும்பிவாடி ஆனூர் அம்மன் கோவிலை முதன்முதலாக நீங்கள் எப்போது பார்த்தீர்கள் என்றால் நான் சிறுவயதிலேயே பார்த்துள்ளேன் அது எங்கள் குலதெய்வக்கோவில். நீங்கள் கோவிலுக்கு சிறுவயதில் செல்லும்போது கோவிலில் யார் பூசை செய்தார்கள் என்று சொன்னால் பூசாரிகள் அடிக்கடி மாறிக்கொண்டே இருப்பார்கள். 2014 – 2015 ஆண்டில் தும்பிவாடி ஆனூர் அம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் செய்யும்போது யார் பூசாரியாக இருந்தார்கள் என்றால் புரோகிதர்களை வைத்து பூசை செய்தோம் அவர்கள் பெயர்கள் ஞாபகமில்லை. கும்பாபிஷேகம் செய்த பிறகு தும்பிவாடி ஆனூர் அம்மன் கோவிலில் யார் பூசை செய்து வருகிறார்கள் என்றால் ஐயரை வைத்து தான் பூசைகளை செய்து வருகிறோம். இனாம் பேர் ரிஜிஸ்டரில் பண்டாரங்களும், ஆண்டிகளும் 200 வருடங்களுக்கு மேலாக இருந்து பூசை செய்து வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவர்கள் தற்காலிகமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இனாம்

பேர் பதிவேட்டில் தற்காலிகம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது பூசாரிகளும் தற்காலிகமாக தான் பூசை செய்கிறார்கள். தாவா சொத்து இனாம் ஒழிப்பு சட்டப்படி அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்தபடியால் வழக்கு சொத்துக்களை K.R.ராமலிங்கம், K.S.கந்தசாமி மற்றும் K.S. ராமசாமி ஆகிய மூவருக்கும் 1966– ல் கோர்ட் ஆப் செட்டில்மெணட் தாசில்தார் உத்தரவுப்படி ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் தவறான பட்டா. மேற்கூறிய நபர்களுக்கு வழங்கப்பட்டாவை எதிர்த்து நீங்கள் மேல்முறையீடு செய்துள்ளீர்களா என்றால் 2018 ஆம் ஆண்டில் தான் இதுகுறித்து தெரியவந்தது. நீங்கள் 1966 லிருந்து தாவா தாக்கல் செய்யும் வரை தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் எடுத்துப்பார்த்துள்ளீர்களா என்றால் எங்கள் அனுபவித்தில் இருந்த கோவில் சொத்து ஆகையால் நாங்கள் பார்க்கவில்லை. தாவா சொத்தை 2008– ல் ஸ்ரீராமச்சந்திரா மிஷன் மற்றும் K.M.ரவிச்சந்திரன்(பி.சா.3) ஆகியோருக்கு மேற்படி K.R.ராமலிங்கம், K.S.கந்தசாமி மற்றும் K.S. ராமசாமி ஆகியோர்களின் வாரிசுதாரர்களால் தாவா சொத்து விற்கப்பட்டுள்ளது என்றால் அது பொய்யான தவறான பத்திரம். ரயத்துவாரி பட்டா பெற்றவர்களின் வாரிசுகள் தங்களுக்குள் 7, 8 ஆவணங்கள் மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் அவை அனைத்தும் தவறான பத்திரங்கள். பத்திரங்களை குறித்து நீங்கள் ஏன் கேள்வி அல்லது பரிகாரம் கேட்கவில்லை என்று சொன்னால் அவை பற்றி எனக்கு தெரியவில்லை. K.M.ரவிச்சந்திரன் என்பவர் தாவா சொத்துக்களை மனைகளாகப்பிரித்து 108 நபர்களுக்கு மனையிடங்களாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் பொய்யான பத்திரங்கள் எத்தனை வேண்டுமானாலும் தயார் செய்யலாம். K.M.ரவிச்சந்திரன் மனையிடங்களாக பிரித்து ரோடுகளை அதன் பஞ்சாயத்திற்கு ஒப்படைத்துள்ளார் என்றால் எங்கள்

அனுபவித்தில் தான் உள்ளது ஆனால் தவறுதலாக ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன 108 மனைகளையும், தார்சாலை தானம் கொடுத்தற்கு நீங்கள் பரிகாரம் கேட்டுள்ளீர்கள் என்றால் அதற்காகத்தான் இந்த வழக்கு நடத்தி வருகிறோம். மேற்சொன்ன சாலையை நீங்கள் ஆக்கிரமித்ததால் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஆக்கிரமிப்கை அகற்ற வேண்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான் அதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால தடை பெற்றுள்ளோம். உங்களிடம் சுவாதீனம் இருக்கும்போது எப்படி மனைகளாக பிரித்து தார்சாலை தானம் செய்திருக்க முடியும் என்று சொன்னால் ரோடுகள் எதுவும் இல்லை அதில் தற்காலிக 2 செட்டுகள் போடப்பட்டுள்ளது. உள்ளூர் கிராமக்கோவில்களை நீங்கள் ஆக்கிரமிப்பதற்காக வந்துள்ளீர்கள் என்றும் வழக்கு தாக்கல் செய்ததன் மூலம் கோவில் சொத்துக்களை ஆக்கிரமிக்க முயன்று வருகிறீர்கள் என்று சொன்னால் தவறு. கரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.585/2008 என்ற வழக்கு நலாயிணி என்பவரால் தாவா சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் ஞாபகமில்லை. K.M.ரவிச்சந்திரன், ராமச்சந்திரா மிஷன் மீது குவாரி தொழில் செய்து வந்த நலாயிணி என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் ஞாபகமில்லை. நீங்கள் வழக்கு சொத்திற்கு உரிமையாளர் இல்லை என்பதால் தான் நலாயிணி வழக்கில் உங்களை சேர்க்கவில்லை என்று சொன்னால் தவறு. 2013–2014 க்கு முந்தைய வருடங்களில் வாதி கோவிலை பற்றி உங்களுக்கு எந்த விவரமும் தெரியாது என்று சொன்னால் தவறு. 1966 முதல் 2018 வரை தாவா சொத்து குறித்து நீங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அந்த காலகட்டத்தில் கோவில்களை பற்றி எந்த ஆக்கிரமிப்பும் இல்லை ஆகையால் எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா சொத்து உங்கள் சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் நீங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கை நீங்கள் பொய்யாக தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.03.02 18:46:34 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.